# Chapter – 7.3

# பதிற்றுப்பத்து

## தறுவினா

**Question 1.**
செந்துறைப் பாடாண் பாட்டு – துறைவிளக்கம் எழுதுக.

**Answer:**

- பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறுவது, 'பாடாண்' எனப்படும்.
- உலகினுள் இயற்கை விசையால் இயன்ற மக்களைப் பாடுதல் செந்துறையாகும்.
- இவ்வகையில், அமைந்த பாடல் செந்துறைப் பாடாண்பாட்டுத் துறை ஆகும்.

## கூடுதல் வினாக்கள்

**Question 2.**
வண்ணம், ஒழுகு வண்ணம் – விளக்குக.

**Answer:**

- 'வண்ணம் என்பது, சந்த (ஓசை நய) வேறுபாடாகும்.
- 'ஒழுத வண்ணம்' என்பது, ஒழுகிய (நெகிழ்ந்த) ஓசையால் சொல்லுதலாகும்.

**Question 3.**
தாக்கும் செந்தூக்கு – விளக்குக.

**Answer:**
தூக்கு' என்பது, செய்யுள் அடி அளவை வரையறை செய்வதாகும். செந்தூக்கு' என்பது, வஞ்சிப் பாவின் இறுதி அடி

போன்றோ, ஆசிரியப்பா அடியின் இறுதி போன்றோ அமைவதாகும்.

**Question 4.**
திருவள்ளுவர், சிறந்த நாடு குறித்துக் கூறும் செய்தி யாது?

**Answer:**
மிகுபசியும் தீராநோயும் பெரும்பகையும் இல்லாதிருப்பதே சிறந்த நாடு எனத் திருவள்ளுவர் கூறுகிறார்.

**Question 5.**
சேரலாதனின் எச்சிறப்புகளைக் குமட்டூர்க் கண்ணனார் புகழ்ந்து பாடியுள்ளார்?

**Answer:**
சேரலாதனின் நாடுகாத்தல் சிறப்பையும், கொடைச்சிறப்பையும் குமட்டூர்க் கண்ணனார் புகழ்ந்து பாடியுள்ளார்.

**Question 6.**
சேரலாதனைக் குறித்து நீ அறிந்தன யாவை?

**Answer:**

- உதியன் சேரலாதனுக்கும் வேண்மாளுக்கும் மகனாகப் பிறந்தவன் நெடுஞ்சேரலாதன்.
- இமயம்வரை படை நடத்தி வெற்றி பெற்றவன்.
- கடம்பர்களை வென்று, தன் வீரர்களுக்குக் கவசமாக விளங்கியவன்.
- தமிழின் சிறப்பை உலகறியச் செய்தவன்.

**Question 7.**
பாடாண் திணை – விளக்குக.

**Answer:**

- பாடு + ஆண் + திணை – பாடாண்திணை. பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறுவது.
- அதாவது ஒரு சிறந்த தலைவனின் புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலிய பண்புகளை ஆராய்ந்து கூறுவதாகும். கைக்கிளைத் திணைக்குப் பாடாண் திணை புறனாகும்.

**Question 8.**
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடியவர் யார்? பெற்ற பரிசில்கள் யாவை?

**Answer:**
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடியவர் குமட்டூர்க் கண்ணனார். அதற்காக உம்பற்காட்டில் 500 ஊர்களையும், தென்னாட்டு வருவாயுள் பாதியையும் பரிசில்களாகப் பெற்ற

**Question 9.**
சேரநாட்டு மக்கள் புலம் பெயர்ந்ததில்லை – ஏன்?

**Answer:**

- செல்வவளம் மிக்கது சேரநாடு.
- அச் சேரநாட்டு மக்களை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தன் கண்போலப் பாதுகாத்தான்.
- எனவே, சேரநாட்டு மக்கள் புலம் பெயர்ந்ததில்லை.
- வேற்று நாடு சென்று குடியேறுவதையும் விரும்பியதில்லை.

## சிறுவினா

**Question 1.**
சேரநாடு, செல்வவளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய தரிணங்களைக் குறிப்பிடுக.

**Answer:**

- நெடுஞ்சேரலாதன், தன் நாட்டையும் மக்களையும் காண்போல் பாதுகாத்தான்.
- மக்கள், பசியும் பிணியும் அறியாது, வேற்று நாட்டுக்கும் செல்ல விரும்பாமல் சுற்றம் சூழ வாழ்ந்தனர்.
- புதுவருவாய்ப் பெருக்கமும், ஈந்து உவக்கும் இன்பமும் உடையவன் சேரலாதன்.
- இக்காரணங்களால், சேரநாடு செல்வவளம் மிக்கதாக விளங்கியது.

## கூடுதல் வினா

**Question 2.**
பதிற்றுப்பத்துக் குறித்துக் குதிப்பெழுதுக.

**Answer:**

- எட்டுத்தொகை நூல்களும், புறப்பொருள் குறித்த நூல் பதிற்றுப்பத்து.
- இது, சேர மன்னக்கலைத்துப் பேரின் சிறப்புகளை எடுத்தியம்புகிறது.
- புறப்பொருள்களும் பாடாண் திணை' குறித்தமைந்த நூல். * ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு , பாடலின் பெயர் ஆகியன இடம் பெற்றிருக்கும். பாடலில் இடம்பெறும் சிறந்த சொற்றொடர், அப்பாடலுக்குத் தலைப்பாக இப்பட்டிருக்கும்.
- இத்தொகை நூலுள், முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை.

## இலக்கணக்குறிப்பு

துய்த்தல், பிழைப்பு – தொழிற்பெயர்கள்
ஒரீஇய – சொல்லிசை அளபெடை
புகழ்பண்பு – வினைத்தொகை
நன்னாடு, கடுந்துப்பு, நல்லிசை – பண்புத்தொகைகள்

மருண்டனென் – தன்மை ஒருமை வினைமுற்று
ஒடியா, தண்டா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்
இகந்து, கண்டு, நல்கி – வினையெச்சங்கள்
புரைவயின் புரைவயின் – அடுக்குத்தொடர்

## உறுப்பிலக்கணம்

**1. மருண்ட னென் – மருள் (ண்) + ட் + அன் + என்**
மருள் – பகுதி, 'ள்', 'ண்' ஆனது விகாரம், ட் – இறந்தகால இடைநிலை
அன் – சாரியை, என் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

**2. துய்த்த ல் – துய் + த் + தல்**
துய் – பகுதி, த் – சந்தி, தல் – தொழிற்பெயர் விகுதி.

**3. நல்கி – நல்கு + இ**
நல்கு – பகுதி, இ – வினையெச்ச விகுதி.

**4. எய்தி – எய்து + இ**
எய்து – பகுதி, இ – வினையெச்ச விகுதி.

**5. தருதல் – தா (தரு) + தல்**
தா – பகுதி, 'தரு' என்றானது விகாரம், தல் – தொழிற்பெயர் விகுதி.

## புணர்ச்சி விதிகள்

**1. மண்ணுடை – மண் + உடை**
"தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்" (மண்ண் + உடை)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (மண்ணுடை)

**2. புறந்தருதல் – புறம் + தருதல்**
"மவ்வீறு ஒற்று வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்" (புறந்தருதல்)

**3. நன்னாடு – நன்மை + நாடு**
“ஈறுபோதல்” (நன் + நாடு), “னலமுன் றன ஆகும் காக்கள்’ (நன்னாடு)

**4. நல்லிசை – நன்மை + இசை**
“ஈறுபோதல்” (நன் + இசை), “முன்நின்ற மெய்திதெல்” (நல் + இசை)
“தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்ரம்” நல்ல் + இசை )
“உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (நல்லிசை)

## குறள் பொருள் அறிக.

**Question 1.**
உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

**Answer:**
மிக்க பசியும், துன்புறுத்தும் நோயும், அழிக்கும் பகையும் சூழாது இருப்பதே சிறந்த நாடாகும்.

**Question 2.**
பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்தில் வந்து.

**Answer:**
நோயில்லாமை, பொரு செல்வம், விளைபொருள், இன்பவாழ்வு, பாதுகாப்பு என்னும் ஐந்தும், ஒரு நாட்டிற்கு அணிகளரகம்.

## பலவுள் தெரிக

**Question 1.**
கூபா – எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.
காரணம் : சேர மன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.
அ) கூற்று சரி; காரணம் தவறு

ஆ) இரண்டும் சரி
இ) இரண்டிற்கும் தொடர்பு இல்லை
ஈ) கூற்று தவறு காரணம் சரி.

**Answer:**
ஆ) இரண்டும் சரி

## கூடுதல் வினாக்கள்

**Question 2.**
“பதிபிழைப்பு அறியாது துய்த்தல் எய்தி” – இத்தொடரில், ‘வாழ்தல்’ என்னும் பொருளுடைய……………..
சொல் அ) பதி
ஆ) பிழைப்பு
இ) துய்த்தல்
ஈ) எய்தி

**Answer:**
ஆ) பிழைப்பு

**Question 3.**
புரைவயின் புரைவயின் பெரிய நல்கி
ஏமம் ஆகிய சீர்கெழு விழவின்” இத்தொடரில், பாதுகாப்பு’ என்னும் பொருளை உணர்த்தும் சொல்……………..
அ) புரைவயின்
ஆ) நல்கி
இ) ஏமம்
ஈ) சீர்கெழு
**Answer:**

**Question 4.**
சேர மன்னர் பதின்மரின் சிறப்புகளை எடுத்தியம்புவது……………..
அ) புறநானூறு
ஆ) பரிபாடல்

இ) பதிற்றுப்பத்து
ஈ) புறப்பொருள் வெண்பாமாலை

**Answer:**
இ) ஏமம்

**Question 5.**
சீர்கெழு விழவின் நெடியோன் அன்ன நல்லிசை
ஓடியா மைந்தநின் பண்புபல நயந்தே – இப்பாடலில்,
நெடியோன் என்பவன் யார்?
அ) சிவபெருமான்
ஆ) திருமால்
இ) நெடுந்சேரலாதன்
ஈ) விழாத்தலைவன்

**Answer:**
ஆ) திருமால்

**Question 6.**
"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு" என்று கூறியவர்................
அ) குமட்டூர்க் கண்ண னார்
ஆ) திருஞானசம்பந்தர்
இ) திருவள்ளுவர்
ஈ) இமயவரம்பன்

**Answer:**
இ) திருவள்ளுவர்

**Question 7.**
இமயத்தில் வில் பொறித்தவன்................
அ) உதியன் சேரலாதன்
அ) நெடுஞ்செழியன்
இ) செங்குட்டுவன்
ஈ) நெடுஞ்சேரலாதன்

**Answer:**
ஈ) நெடுஞ்சேரலாதன்

**Question 8.**
கடம்பர்களை வென்றவன்…………….
அ) உதியன் சேரலாதன்
ஆ) செங்குட்டுவன்
இ) கரிகாலன்
ஈ) நெடுஞ்சேரலாதன்

**Answer:**
ஈ) நெடுஞ்சேரலாதன்

**Question 9.**
பதிற்றுப்பத்துள் இரண்டாம் பத்தைப் பாடியவர்…………….
அ) கபிலர்
ஆ) பரணர்
இ) குமட்டூர்க் கண்ணனார்
ஈ) ஔவையார்

**Answer:**
இரு குமட்டூர்க் கண்ணனார்

**Question 10.**
'நிரை வெள்ளம்' என்னும் தொடரின் பொருள்…………….
அ) வானுலக வீரர்கள்
ஆ) வெற்றி பெற்றோர்
இ கவசமானோர்
ஈ) நரகத்து வீரர்கள்

**Answer:**
ஈ) நரகத்து வீரர்கள்

**Question 11.**
கைக்கிளைக்குப் புறனாக அமையும் திணை…………….

அ) பெருந்திணை
ஆ) வெட்சித்திணை
இ) வாகைத்திணை
ஈ) பாடாண்திணை

**Answer:**
ஈ) பாடாண்திணை

**Question 12.**
‘வண்ணம்’ என்பது……………..
அ) செய்யுள் வேறுபாடு
ஆ) துள்ளல் ஓசை
இ) சந்த வேறுபாடு
ஈ) புலமை வேறுபாடு

**Answer:**
இ) சந்த வேறுபாடு

**Question 13.**
எட்டுத்தொகையில் அமைந்த புறத்திணை நூல்கள்……………..
அ) பதிற்றுப்பத்து, நற்றிணை
ஆ) பதிற்றுப்பத்து, பரிபாடல்
இ) பதிற்றுப்பத்து, புறநானூறு
ஈ) புறநானூறு, பரிபாடல்

**Answer:**
இ) பதிற்றுப்பத்து, புறநானூறு

**Question 14.**
பதிற்றுப்பத்து நூல் முழுமையும், …………….. திணையில் அமைந்துள்ளது.
அ) வெட்சி
ஆ) நொச்சி
இ) பாடாண்
ஈ) பொதுவியல்

**Answer:**
இ) பாடாண்

**Question 15.**
பதிற்றுப்பத்து என்பது, ................ மன்னர்கள் பத்துப்பேரின் சிறப்புகளைப் பாடுவது.
அ) பாண்டிய
ஆ) சோழ
இ) பல்லவ
ஈ) சேர

**Answer:**
ஈ) சேர

**Question 16.**
பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறும் திணை................
அ) கரந்தை
ஆ) வஞ்சி
இ) பாடாண்
ஈ) பொகவியல்

**Answer:**
இ) பாடாண்

**Question 17.**
சந்த வேறுபாட்டைக் குறிப்பது, ................என்னும் தொடர்.
அ) துறை
ஆ) திணை
இ) தூக்கு
ஈ) வண்ணம்

**Answer:**
ஈ) வண்ணம்

**Question 18.**
பதிற்றுப்பத்துள் கிடைக்காத பத்துகள்……………
அ) முதற்பத்து, எட்டாம்பத்து
ஆ) நான்காவத்து, ஆறாம்பத்து
இ) எட்டாம்பத்து, இறுதிப்பத்து
ஈ) முதல்பத்து, இறுதிப்பத்து

**Answer:**
ஈ) முதல்பத்து, இறுதிப்பத்து

**Question 19.**
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது……………
அ) முதல்பத்து
ஆ) நான்காம்பத்து
இ) பத்தாம்பத்து
ஈ) இரண்டாம்பத்து

**Answer:**
ஈ) இரண்டாம்பத்து

**Question 20.**
பதிற்றுப்பத்து' என்னும் தொடர்பு ……………எனப் பிரியும்.
அ) பதிற் + றுப்பத்து
ஆ) பதிறு + பத்து
இ) பதிற்று + பத்து
ஈ) பத்து + பத்து

**Answer:**
ஈ) பத்து + பத்தில்

**Question 21.**
பொருத்துக.
1. சான்றோர் – அ. கடுந்துப்பு
2. புதுவருவாய் – ஆ. மருண்டனென்

3. மிதவலிமை – இ. மன்னுயிர்
4. வியப்படைந்தேன் – ஈ. புரையோர்
– உ. யாணர்

**Answer:**
1 – ஈ. 2 – உ, 3 – அ, 4 – ஆ

**Question 22.**
தவறான விடையைக் கண்டறிக. பாடாண் திணை என்பது.
அ) கைக்கிளைக்குப் புறனானது
ஆ) மன்னனின் புகழ், வலிமை, வள்ளன்மைகளைக் கூறுவது
இ) ஆண்மகனின் ஒழுகலாறுகளைப் பாடுவது
ஈ) ஆண்மகனின் போர்ச்சிறப்பை மட்டும் பாடுவது.

**Answer:**
ஈ) ஆண்மகனின் போர்ச்சிறப்பை மட்டும் பாடுவது.